Crl.Misc/ 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar Case No. **STC.70/2023**

Miscellaneous

Preliminary Register

Deposition of PW-2 /

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செந்தில்குமார் | Father Name | : | பொன்பெருமாள் |
| Village | : | | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | கிளை மேலாளர், தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, கோவிந்தக்குடி. |
| Religion | : | | Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of July 2025.

புகார்தாரர் ஆஜர். புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை. எதிரி ஆஜர். கு.வி.மு.ச. பிரிவு 311ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் கடந்த 23.11.2022 அன்று கோவிந்தகுடி தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி கிளையில் கிளை மேலாளராக பணியில் சேர்ந்தேன். 12.10.2022 அன்று நான் கோவிந்தகுடி தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி கிளையில் பணியில் இல்லை என்றால் சரிதான். கடந்த 23.11.2022 க்கு முன்பு கோவிந்தகுடி தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி கிளை தொடர்புடைய கணக்குகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். **பு.த.சா.ஆ.5-ல்** நான் கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சி சொல்ல எழுத்துப்பூர்வமாக அதிகாரம் உள்ளதா என்றால் கிளை மேலாளர் என்ற முறையில் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் சொல்ல எனக்கு அதிகாரம் உள்ளது. சாட்சியம் சொல்வது சம்பந்தமாக ஏதாவது ஆவணங்கள் உள்ளதா என்றால் தற்சமயம் என்னிடம் இல்லை. எனது பெயரை குறிப்பிட்டு இவ்வழக்கில் சாட்சியம் சொல்ல

ஏதாவது ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. 12.10.2022 ம் தேதியை தவிர வேறு எந்த தேதியிலும் லட்சங்களில் பணப்பரிமாற்றம் நடைபெறவில்லை என்றால் 25.10.2022ம் தேதி ரூபாய் 4 லட்சத்திற்கான பணப்பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டுள்ளது அதனைத் தவிர வேறு பணப்பரிவர்த்தனை ஏதும் லட்சங்களில் இல்லை. உங்கள் வங்கியில் எத்தனை அலுவலர்கள் உள்ளனர் என்றால் இன்றைய தேதியில் 5 அலுவலர்கள் உள்ளனர். அதில் Cash deposits or Cheque deposits ஐ கவனித்துக்கொள்ள உதவி மேலாளர் மற்றும் கிளர்க்(Clerk) உள்ளனர். அவர்களுக்கு இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **பு.த,சா.ஆ.5 மற்றும் பு.த.சா.ஆ.10 ல் உள்ள** விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். இந்த காசோலை நேரடியாக வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டது அல்ல CTS முறையில் தாக்கல் செய்யப்பட்டது. CTS முறையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலையில் பின்புறம் ஸ்கேன் செய்ததற்கு ஆதாரமாக சீல் வைப்பது வழக்கம் என்றால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **பு.த.சா.ஆ.1 மற்றும் பு.த.சா.ஆ.2 ன்** அவ்வாறு சீல் இல்லை என்றால் சரிதான். இந்த **பு.சா.ஆ.5-** குறிப்பாணை தருவதற்கு முன்பு நானோ எனக்கு முன்பிருந்த எங்கள் வங்கி மேலாளரோ எதிரியின் கணக்கு விபரங்களை நேரடியாக பார்த்தோமா என்றால் இல்லை. எதிரியின் வங்கியிலிருந்து பெறப்பெற்ற தகவலின் மூலம் இந்த குறிப்பாணை கொடுத்தோம். மேற்படி தகவலை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்தீர்களா என்றால் இல்லை. அதனை சமர்பிக்காததற்கு காரணம் ஏதும் உண்டா என்றால் இல்லை. நான் இவ்வழக்கு சம்பந்தமாக சாட்சியம் அளிப்பதற்கு உரிய அதிகாரமோ அதைப்பற்றிய தகவல் செறிவோ கிடையாது என்றால் சரியல்ல. புகார்தாரர் எங்களது வங்கியில் கணக்கு வைத்துள்ளார் என்பதற்காக நான் அவருக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு புகார்தாரரின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.07.18 19:09:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.